JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
JAN 10 '68

செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

[புத்-எகூ] யாழ்ப்பாணம்:- பிலவங்க ௵ கார்த்திகை ௴ கரு௳ வெள்ளிக்கிழமை (1-12-1967) [இல-௩௪]

## நாவலர்

பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

III

**சென்னையில்!**

காலயுத்தி வருஷம் ஆனி மாதம் (1858) நாவலருக்கு முப்பத்தாறும் வயசு நடக்கிறது. பெரிய புத்தகங்கள் பதித்தற்குத் தமது சிறிய அச்சியந்திரம் போதாமையால் சென்னையில் தமது புத்தகங்களைப் பதித்தற்கு அங்குச் சென்றார். முதலிற் கூலிகொடுத்து அச்சிடுவித்தார். பின் அங்கேயும் வித்தியானுபாலன அச்சியந்திரசாலை என்ற பெயரில் ஒரு அச்சுக்கூடந் தாபித்தார். அங்கேயிருந்து புத்தகங்களை அழகுற அச்சிடுவதைக் கண்ட இராமநாதபுர சமஸ்தானத்துப் பொன்னுச்சாமித் தேவர் சென்னையில் நாவலரைச் சந்தித்துச் சில புத்தகங்களைத் தம்செலவில் அச்சிடவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். தேவரின் வேண்டுகோளின்படி திருக்குறள் பரிமேலழகருரை 1860 ஐப்பசியிலும், திருக்கோவையாருரையும் தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயமும் 1861 வைகாசியிலும் வெளி வந்தன. அம் மூன்றும் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர் மாணவர்கள் தியாகராசச் செட்டியாரை உள்ளிட்டவர்களும் செய்த சிறப்புப் பாயிரங்களைக் கொண்டவை. பாயிரங்கள் மிக்க பயபத்தியோடு செய்யப்பட்டிருக்கின்றன. 'கற்றுணர் புலவ ருட்களிக்கும், நூற்றுணர் ஆறுமுக நாவலனே' என்கின்றார் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. 'என்னுளங் குடிகொண்டிருக்கும், நன்னுசிராறு முகநாவலனே' என்கின்றார் தியாகராசச் செட்டியார். திருக்குறளுக்குப் புத்துரை ஒன்று செய்த தமிழ்மகான் வ. உ. சிதம்பரப்பிள்ளை, மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் மாணவர்களுஞ் செய்த பாயிரங்களுக்கும் உரை யெழுதியிருக்கின்றார். இதனால் அந்தப் பாயிரங்களின் சிறப்பு உணரத் தகும்.

**மீனாட்சி சுந்தரம்பிள்ளை:**

மீனாட்சி சுந்தரம்பிள்ளை நாவலருக்கு ஏழு வயசு மூத்தவர்; 1815-ல் பிறந்தவர். ஏழு வயசு இளைய நாவலருக்கு, நாவலரின் இருபத்தாறரை வயசில், 1849-ல் 'நாவலர்'ப் பட்டம் நல்கிய ஆதீனம், மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்றொருவரை அப்பொழுது அறியவில்லை. அக்காலத்தில ஊர் தோறுமுள்ள சிவஸ்தலங்களுக்கு அவ்வூரிலுள்ளவர்களின் கேள்விப்படி புராணங்கள் செய்து அரங்கேற்றிக்கொண்டும், அந்தாதி கோவை உலாப் பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தங்களை நூற்றுக் கணக்கிற் செய்து கொண்டும், தம்மைத் தொடரும பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் தாமியற்றிய நூல்களைப் பாடஞ் சொல்லிக் கொண்டும், ஆங்காங்குள்ள செல்வர்களின் ஆதரவிற் காலங்கழித்தவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. 1858-க்குப் பின்புதான் 1860 க்கு அணமையிலேதான் திருவாவடுதுறையை அணுகி அங்கே மகாவித்துவான் என்ற பட்டம் பெற்று, சின்னப்பட்டமாயிருந்த நமசிவாயத்தம்பிரானுக்கும் வன்றொண்டஞ் செட்டியார் இராமசாமிப் பிள்ளை என்பவர்களுக்கும பாடஞ் சொலலிக்கொண்டிருந்தவர். இந்த மூவரும 1864 ல் நாவலருக்கு மாணவராய்விட்டார்கள். நாவலரின் பழக்கம் அப்பொழுது தான் இவர்களுக்குக் கிடைத்தது. 1860-ல உ. வே சாமிநாதையர் ஐந்து வயசு நிரம்பாத குழந்தை; 1855-ல் பிறந்தவர். இவர் 1860-ல் வெளி வந்த திருக்குறட் பதிப்புடன் 1854 ல் பழகி நாவலருக்கு மாணவரான இராமசாமிப் பிள்ளையைச் சம்பந்தப்படுத்தி மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் எழுதியிருப்பது தவறு.

**பரிகாரம்:**

1882-ல் கனகரத்தினம்பிள்ளை அச்சிட்ட நாவலர் சரித்திரத்தை, சிவகாசி அருணாசலக் கவிராயர்

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

உ
சிவமயம்

கண்களிரண்டுமவன்கழல்
கண்டு களிப்பனவாகாதே,
காரிகையார்கள்தம்வாழ்விலென்
வாழ்வு கடைப்படுமாகாதே,
மண்களில் வந்து பிறந்திடுமாறு
மறந்திடுமாகாதே,
மாலறியாமலர்ப் பாதமிரண்டும்
வணங்குதுமாகாதே,
பண்களிகூர்தரு பாடலொ
டாடல் பயின்றிடு மாகாதே,
பாண்டிநன் னாடையான்படை
யாட்சிகள் பாடுதுமாகாதே,
விண்களிகூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படுமாகாதே,
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படுமாயிடிலே.

— மாணிக்கவாசகசுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவு அற்ற களஞ்சியம்.

உ
### திருவெம்பாவைப் பூசை

யாழ். சைவபரிபாலனசபை யாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் கார்த்திகை ௴ 23௳ (9-12-67) சனிக்கிழமையன்று திருவெம்பாவைப் பூசை யாரம்பமாகி நடைபெறும். திருவாதவூரடிகள் புராணபடனமும் ஷெ பத்துத் தினங்களிலும் நிகழ ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது.

## சைவசமயத்தை உணர வைத்தவர் நாவலர் பெருமான்

——:0:——

["இந்துசாதனம்" அபிமான நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

சிதம்பரத்திலுள்ள சைவப் பிரகாச வித்தியாசாலையையும், சென்னை நகரில் வித்தியானுபாலன யந்திரசாலையையும் ஸ்தாபிதம் செய்துள்ள, யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 88 ஆம் குருபூஜைவிழா கார்த்திகை 9-ம் நாள் வித்தியாசாலையில் சிறப்புடன் நடைபெற்றது

காலையில் ஸ்ரீ சேக்கிழார் கோயிலில் ஆசிரியர்கள் மாணவர்கள் விநாயகர் வழிபாடு செய்துகொண்டு மஞ்சத்தில் நாவலர் பெருமானின் திருவுருவப் படமும், முதற் பதிப்பு நூற் சுவடிகளும் வைத்து நன்கு அலங்கரித்து வித்தியாசாலைக்கு ஊர்வலமாகவந்து குருபூஜை விழாவை நடத்தி ஆராதனைகள் புரிந்து ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானுக்கு அஞ்சலி செய்தனர் மாணவ - மாணவிகளுக்கு பூந்தியும், வாழைப்பழமும் வழங்கப்பட்டது.

காலை 11 மணிக்கு ஸ்ரீநடராஜர் கோயிலில் திருமுழுக்கும் - வழிபாடும் நடைபெற்றது.

மாலையில் 'சித்தாந்தக்கலைச் செல்வர்' காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேல் முதலியார் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

நாவலர்பெருமான் இயற்றிய துதிப் பாடல்களை மாணவ - மாணவிகள் ஓத விழா தொடங்கியது; குரு வணக்க கீர்த்தனைகள் பாடிய பின்னர் நற்பொறுப்பாளர் திரு. தி. க. இராஜேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார். வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டது.

மாணவிகள் நாவலர் அம்மானை, நாவலர் கும்மி பாடினார்கள். நாவலர் கீர்த்தனைப் போட்டிகள், நாவலர் பேச்சுப் போட்டி, யோகி சுத்தானந்த பாரதியார் எழுதிய நாவலர் நாடகம் என்பன நடைபெற்றது.

விழாவின் தலைவரான 'சித்தாந்தக் கலைஞர்' காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேல் முதலியார் தலைமையுரை வழங்குகையில், [illegible] சமயத்தை சமயாசாரியர்கள் வளர்த்தபின்னர் நம்பியாண்டாரும் அவருக்குப்பின் சேக்கிழாரும், அவருக்குப்பின் சிவஞானசுவாமிகளும், அவருக்குப்பின் நம்முடைய சைவ சமயத்தை நாம் நன்றாக உணரவும், அதனை நாம் எவ்வாறு நடத்திக்கொண்டு வரல்வேண்டும் என்பதனையும் எடுத்துக் காட்டியவர் நமது நாவலர் பெருமானாகும்.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்க உயர் திரு. நல். முருகேச முதலியார் வருவதாக இருந்தது, சேக்கிழார் சோழ அரசருக்கு அமைச்சராக இருந்து அருந்தொண்டுகள் புரிந்துகொண்டு வந்தார். அவ்வாறே பலதுறைகளிலும் சிறந்து விளங்கும் நமது உயர் திரு. நல். முருகேசமுதலியார் நமது தமிழக அரசில் பொருளாதாரத்துறையில் சிக்கன முறைகளைக் கையாளுவதற்குப் பணியாற்றிக்கொண்டு வருவதால் இவ்விழாவிற்குத் தலைமைதாங்க வரமுடியாமல் போய்விட்டது, ஆகவே உயர் திரு. நல். முருகேசமுதலியார் அரசியல் துறையிலும்-சம

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

உ
### சைவப் புலவர் — இளஞ் சைவப் புலவர் பரீட்சைகள் 1967.

சைவபரிபாலனசபையார் நடாத்தும் மேற்குறித்த பரீட்சைகள் மார்கழி மாதம் நடைபெறும். விண்ணப்பித்தவர்களுக்கு நேரசூசிகை அனுப்பப்படும். 10-12-67-க்கு முன்னர் நேரசூசிகை கிடைக்காதவர்கள் பரீட்சைக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளுக:

#### 1968-ம் ஆண்டுப் பரீட்சைகள்

பாடத் திட்டத்தில் குறிப்பிட்டபடி ஆவணி மாதத்தில் நடைபெறும். முத்திரையோட்டிய தபாலுறை அனுப்பினால் இலவசமாகப் பாடத்திட்டப் பிரதி அனுப்பிவைக்கப்படும்.

சைவபரிபாலனசபை,
30-11-67,

க. கணபதிப்பிள்ளை.
பரீட்சைக் காரியதரிசி.

### சமயப் பொதுக் கூட்டம்

வேலணைக் கறுவலையாவின் சமாதியடியில் நிகழும் பிலவங்க ௵ கார்த்திகை ௴ 20௳ (6-12-67) புதன்கிழமை காலை 8 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்.

THE HINDU ORGAN

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

பிலவங்க ஞூ கார்த்திகை மீ கரு-உ வெள்ளிக்கிழமை [1967]

## நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம்

நல்லை மதுரைத் திருஞானசம்பந்தராதினம் மதுரைத் திருஞானசம்பந்தராதீனத்தின் கிளையாகத் தாபிக்கப்பெற்று ஒருவருடம் மூன்று மாதகாலம் கழிந்துவிட்டது. அதனுடைய தலைவராகவுள்ள ஸ்ரீ ல ஸ்ரீ: சுவாமிநாதத்தம்பிரானவர்கள் தாயாதீனத் தலைவருடைய சொற்படி கடமையாற்றி வருகின்றனர். ஆதீனத்தில் தாபிக்கப்பெற்றுள்ள மூர்த்திகளுக்கும் திருஞானசம்பந்தருக்கும் ஆகம முறைப்படி கிரமமாகப் பூசைகள் நிகழுகின்றன. பிள்ளைகளுக்கு திருமுறைவகுப்பு நடைபெறுகின்றது. சென்றவருடத்தில் திருஞானசம்பந்தர் ஞானப்பாலருந்தும் விழா, பொற்றாளம் முத்துச்சிவிகை பெற்ற விழாக்கள் சிறப்பாக நடாத்தப்பெற்றன. ஆதீனத தலைவராகிய சுவாமிகள் இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்று சங்கீத சகிதம் சமயச் சொற்பொழிவாற்றி வருகின்றனர்.

எங்கள் சைவபரிபாலனசபையாதரவில் சபை நாவலர் மண்டபத்தில் திருவிளையாடற் புராண விரிவுரைகள் தொடர்பாக நிகழ்த்திவருகின்றார்கள். நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் வண்ணைச் சிவன்கோவிலிலும் வாரம் ஒரு நாளில் பஜனைசெய்துவருகின்றனர். நல்லூர் சிவன்கோயில் அதிகாரிகள் அவருடைய பணிகளுக்குக் கோவில் மண்டபத்தை உதவுவதுடன் ஆதரவும் ஊக்கமும் அளிக்கின்றனர். சுவாமிகள் பஜனைகளில் சைவத் தெய்வத் திருமுறைகளையே ஓதுவார். சிவநாமத்துக்குச் சமமாக யோனிவாய்ப் பட்டுப் பிறந்த பெரியார்களின் நாமங்களைக் கூறி வழிபடும் அன்பர்கள் அவருடைய பஜனைமுறையைப் பின்பற்றுவார்களாக.

தமிழ்நாட்டில் சைவத்தையும் தமிழையும் சைவாதீனங்களே வளர்த்துவருகின்றன. திருவாவடுதுறையாதீனம், தருமபுராதீனம், மதுரைத் திருஞானசம்பந்தராதீனம், சூரியனர் கோயிலாதீனம், திருவண்ணமலையாதீனம் முதலியன அவ்வாதீனங்களைச் சேர்ந்தவை. அவற்றுக்கு ஏராளமான சொத்துக்களுண்டு. "முனிவரும் மன்னரும் முன்னுவபொன்னுல் முடியும்" என்னும் மாணிக்கவாசக சுவாமிகளின் வாக்கிற்கிணங்க அவ்வாதீனங்கள் தத்தம் சொத்துக்களின் வருவாயைக் கொண்டு சைவப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து வருகின்றன. ஆனல் எங்கள் நல்லை மதுரைத் திருஞானசம்பந்த ராதீனத்துக்கு ஆஸ்திகளில்லா திருப்பது பெருங் குறையாகும்.

இவ்வாதீனத்தின் முதலாவதாண்டுப் பூர்த்தி விழா நல்லூர்ச் சிவன்கோயில் மண்டபத்தில் 27-11-67 திங்கட்கிழமை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் தலைமையில் நடைபெற்றது. சில சைவப் பெரியார்களுக்குப் பட்டமளிப்புச் செய்யப்பட்டது. "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப்பின் அவர் மரபின்படி சைவத்தொண்டும், தமிழ்த்தொண்டும் புரிய இறைவன் திருவருளால் இந்த நல்லை மதுரைத் திருஞானசம்பந்தராதீனம் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. ஷெ ஆதீனம் தாபிக்கப்பெற்ற சொற்ப காலத்தில் நமது நாட்டில் சிறந்த சைவப்பணியும் தமிழ்ப் பணியும் புரிந்து வருகின்றது. ஆதீனத் தலைவர் துறவுபூண்டு தமது உடல் பொருள் ஆவி மூன்றினையும் சிவப்பணிக்கு அர்ப்பனஞ் செய்துள்ளனர். அவருடைய பணி விருத்தியடையச் சைவ மக்கள் பொருளுதவியும் சரீரவுதவியும் புரிதல்வேண்டும். ஆதீனத்துக்கு ஒரு சொந்த நிலையத்தைத் தேடிக் கொடுத்தல் வேண்டும்" என விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய முதலியார் செ. முத்துத்தம்பி யவர்கள் குறிப்பிட்டார்கள். முதலியாரவர்களுடைய வேண்டுகோளைச் சைவமக்கள் யாவரும் கவனித்து இவ்வாதீனத்தை நமது நாட்டில் ஒரு சைவ ஞானதீபமாகத் திகழச் செய்தல் வேண்டும். நாட்டில் வேத நெறி தழைத்தோங்கவும், சைவநெறி விளங்கவும் இவ் வாதீனம் திருவருளால் உற்பத்தியானது. இதனை உரிய முறையில் ஆதரித்து அடைய வேண்டிய நற்பயனைப் பெறுதல் சைவ மக்களுடைய கடமையாகும்.

# நல்லை. திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஆண்டுவிழா



"சிவதர்மபாஸ்கரன்"

நல்லை. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழா சென்ற 27-11-67 திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் நல்லூர் கைலாசநாதர் கோவில் மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. அன்று சோமவார தினமாகையால் பெருமானுக்கும் அம்பாளுக்கும் விஷேச சோட சோபசார பூஜாராதனைகளும் இடம் பெற்று விழா வனப்புற ஆரம்பமாயது.

ஷெ ஆதீனம் நமது ஈழநாட்டில் ஒருவருடமும் 3 திங்களும் சிறந்த சமயப்பணியாற்றியுள்ளது. ஈழத்தின் ஒவ்வோர் கோணங்களிலுமுள்ள சிறு குறிச்சிகளிலும ஆதீன முதல்வரால் சமயப் பிரசாரம் செய்யப்பட்டு வந்ததும் வருவதும் சைவ உலகம் நன்கறிந்ததே.

இவ்வாதீனத்தின்தாயாதினமாகிய மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் அருளாணையின் பிரகாரம் நமது நாட்டில் சமயத் தொண்டாற்றிவரும் சிலர்களுக்குப் பட்டங்கள் அளித்துக் கௌரவித்தலும் ஷெ விழாவில் இடம்பெற்றது.

வரையாது அறம் வளர்க்கும்பெரியார் சைவச்செம்மல் திரு; சு. கனகசபை (சிறுப்பர்)J.P. அவர்கட்கு "சிவதர்மபாஸ்கரன்" என்ற சிறப்புப் பட்டமும், சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றிவரும் பெரியார் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கட்கு "அறநெறிக்காவலர்" என்னும் பட்டமும், புராண படன விரிவுரையாளரும் சிறந்த சமய எழுத்தாளருமாகிய பிரம்மஸ்ரீ: வ. குகசர்மா அவர்கட்கு 'ஞானபானு" என்ற பட்டமும், சைவப்பிரசாரகர் திரு: பொன். அப்புக்குட்டி அவர்களுக்கு "சைவ சிகாமணி" என்ற பட்டமும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு "செஞ்சொற் செல்வி" என்ற பட்டமும், லயஞான குபேர பூபதி V. தெட்சணாமூர்த்தி அவர்களுக்த "லயச் சக்கரவர்த்தி" என்ற சிறப்புப் பட்டமும் வழங்கப்பட்டன.

ஆதீனத்தின் சமயத் தொண்டுகளையும் முதல்வரின் சேவையையும் பாராட்டி முதலியார் செ. முத்துத்தம்பி திரு; மு மயில்வாகனம் பிரம்மஸ்ரீ: வ. குகசர்மா ஸ்ரீமதி: தங்கம்மா அப்பாக்குட்டி திரு: பொன். அப்புக்குட்டி முதலிய பல பெரியார்கள் நல்லுரை வழங்கினர்.

சைவ மக்கள் ஆதீனத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து ஆதீனத்தின் சேவைக்கு ஊக்கமளித்தல்வேண்டும் எனப் பலரும் வற்புறுத்தினர்.

நல்லூர்ச் சிவாலயம் ஆதீனத்தின் சேவைக்குப் பெரிதும் உதவியாயிருப்பதைப் பலரும் அறிவர்.

### "சிவதர்மபாஸ்கரன்"

நல்லை. மதுரைத் திருஞான சம்பந்தராதீனத்தின் முதலாவது ஆண்டு நிறைவுவிழாவின்போது யாழ்ப்பாணத்தைச் சார்ந்த திரு. சு. கனகசபை (சிறுப்பர்) J. P. அவர்களைத் தாயாதீனத்தின் அருளாணையின்படி ஷெ ஆதீனத் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் அவர்கள் "சிவதர்ம பாஸ்கரன்" என்ற சிறப்புபட்டம் வழங்கிக் கௌரவித்தார்கள். ——

# நாவலரைப்போன்றவர் அவதரிக்கவேண்டும்

"மாணிக்கவாசக சுவாமிகள் ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் முத்தியடைந்தனர். ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் கார்த்திகை மாதம் மகநட்சத்திரத்தில் சிவபதமடைந்தனர். ஒருவர் பிறக்கின்ற அல்லது மறைகின்ற நட்சத்திரத்திலிருந்து அவருடைய தவத்தின் பெருமையை அளக்க முடியுமென ஆன்றோர் கூறுவர்"

நாவலர் பெருமான் எக்கருமத்தையும் திருவருளை முன்னிட்டே இம்மைப் பயன்கருதாது புரிந்தவர். சிவ பக்தி, தியாகம், அடக்கம், வாய்மை முதலிய பண்புகள் அவருடைய வாழ்க்கையைச் சிறப்பித்தன. நாட்டில் வேதாகம ஒழுக்கத்தை நிலை நாட்டின இக் காலம் மனிதன் சமய வாழ்க்கையை வேதாகம ஒழுக்கத்தின்படிநடாத்த நாவலர் போன்று சற்புத்திரன் அவதரிகக மக்கள் தவஞ் செய்தல்வேண்டும்"

இவ்வாறு 25-11-67 - ல் சைவபரிபாலன சபையாதரவில் நடைபெற்ற நாவலர் குருபூசைக் கூட்டத்தில் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை தமது தலைமையுரையில் கூறினர்.

சிவஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா அவர்கள் சிவ பூசை மகிமையென்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர்.

வித்துவான் க. கணபதிப்பிள்ளை B. A. அவர்கள் நாவலர் பெருமானுடைய மரபு மறைந்து வருவதாகக் கூறி, வலிகாமம் மேற்கில் ஓர் ஆலயத்தில் இன்று கென்னடி ஞாபகமும் நாவலர் நினைவும் ஒருசேர நிகழக் கூடியதான ஒரு கூட்டம் நடத்தப்படுவதே இதற்குச் சான்றாகும் எனக் குறிப்பிட்டார். (ந. நி.)

x x x

### நாவலர் விழா

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நாவலர் தின விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன அதிபர் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்கினர். வடமாநில உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசப்பிள்ளை, கோப்பாய்ப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. சி. கதிரவேற்பிள்ளை, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் ஆகியோரினது கருத்துரைகளும். நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன அதிபரால் "பொய்யா மொழியும் மெய்ஞ்ஞான பண்டிதனும்" என்னும் பொருள் பற்றிச் சங்கீத உபந்யாசமும் நடைபெற்றன.

இறுதியில் மன்றச்செயலாளர் திரு. ஆர். பி. ஹரன் நன்றி கூறினர்.

## நாவலர்

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

பாட்டாக்கி, 1898-ல் வெளியிட்டிருக்கிறார். இக் கவிராயர் மீனுட்சிசுந்தரம் பிள்ளைக்கும் நாவலருக்கும் மாணவரும் சுப்பிரமணிய தேசிகருக்குக் கீழே சின்னப்பட்டமா யிருந்தவருமான நமசிவாயத்தம்பிரானின் மாணக்கர். இச் செய்யுள் வடிவான சரித்திரம் 1934-ல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது அதற்குப் பதினன்கு பக்கங்கள் கொண்டதொரு முகவுரை நாவலரின் தமையனர் புதல்வரும் அவருக்குச் சரித்திரமெழுதியவருமான த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதி யிருக்கிறார்கள். அம் முகவுரை என் பெயரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில், சாமிநாதையர் தமது இளமைப் பருவத்தில் நடந்த சமபவத்தைக் கேட்டவர்வாய்க் கேட்டெழுதிய தடுமாற்றமான தவறுகள் காட்டப்பட்டிருக்கின்றன. சாமிநாதையர் எழுதிய என் சரித்திரத்துக் கெழுந்த சுருக்கம் நாவலரைப்பற்றியும் சி. வை. தாமோதரம்பிள்ளையைப்பற்றியும் ஐயர் அவர்கள் எழுதியவைகளை விலக்கியிருக்கின்றது.

(வளரும்)

## சப்தரிஷி வாக்கியம் உபந்நியாசம்

"ஒருவன் செய்துகொள்ளும் கன்மத்துக்குத் தக்க இன்ப துன்பங்களை அனுபவிப்பான் என்பதுதான் இந்து தர்மக் கொள்கை. சோதிடம் அவன் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை அவனுடைய பிறந்தநேரம் கைரேகை முதலியவற்றைக் கொண்டு முன்னரே தெரிவிக்கும் கலையாகும் விஞ்ஞானம் ஏகதேசமாக ஒருவன் தனது மனம் ஐம்புலன் முதலிய கரணங்களால் அராய்ந்து காணும் முடிவுகளைக் கொண்டது. மெய்ஞ்ஞானம் மனம் ஐம் புலன் முதலிய கரணங்களுக்கு அப்பாற்பட்டது. சோதிடமும் மெய்ஞ்ஞானிகளால் உணரக்கூடிய கலையாகும். சோதிடம் கன்ம நீக்கத்தை அடைதற்குத் துணைபுரியுங் கலை" என திரு S. சிற்றம்பலம் B. Sc. (Hons Lond.) வருமான வரி இலாகா ஆணையாளர் (28-11-67) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் 'சப்தரிஷி வாக்யகிம்' என்னும் பொருள்பற்றி ஆற்றிய சொற்பொழிவில் கூறினார். யாழ்ப்பாணம் இந்துகலாச்சார மன்றத்தின் சார்பில் நடந்த இக் கூட்டத்திற்கு மன்றத் தலைவர் திரு. சிவ, உ. சோமசேகரம் அவர்கள் தலைமைவகித்து முன்னுரை கூறினார். மன்றக் காரியதரிசி திரு. நா. செல்லப்பா அவர்கள் நன்றி கூறினர்.

## தேக வியோகம்

அரசாங்க மேற்சபை அங்கத்தவர் திரு. சு. நடராசா அவர்களின் தாயாரும் வழக்கறிஞரும், இந்துசாதனம் ஆங்கிலப் பிரசுரத்தினாசிரியருமாகிய திரு இ. நம. சிவப்பிரகாசம் அவர்களின் மாமியாருமாகிய ஸ்ரீமதி: சுப்பிரமணியம் சுந்தரம் அவர்கள் தமது 76-வது வயதில் சிவபதம் அடைந்தனர். கடவுள் பக்தி பதிவாக்குத் தட்டாமை அன்பு ஆசாரம் முதலிய நற்பண்புகளுடன் அம்மையார் தமது வாழ்க்கையை நடத்தி வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## சைவ சமயத்தை......

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத் துறையிலும் அருந்தொண்டுகள் செய்துகொண்டும் வருகின்றார் என்று கூறினார்.

ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானை நாம் என்றென்றும் மறக்கவே முடியாது, நான் பள்ளியில் படிக்கும்போது நாவலர் பெருமானின் சைவ வினாவிடை, பாலபாடம் முதலானவைகளைப் படித்துத்தான் நான் இந்நிலைக்குவந்துள்ளேன். ஆகவே சைவத்திற்கு நாவலர் பெருமான் தூண்போலிருந்து வந்துள்ளார்கள் என்று கூறுவதில் ஐயமே இல்லை என்றும் நாவலர் பெருமான் பெரும்மேதையென்றும் கூறினார்.

( வளரும் )

# திருஅருணாசலக் கார்த்திகை விளக்கீடு

[யாழ்ப்பாணம் மேலைப் புலோலி ஸ்ரீமத் நா. கதிரவேற்பிள்ளையவர்கள் ஆற்றிய உபந்நியாசம். "சைவம்" என்னும் சஞ்சிகையில் முற்காலத்தில் பிரசுரமானது )

முற்றொடர் - 4.

### 2. தீப இயலும் அதன் உண்மையும்

ஆயயம் முதலிய சிவசந்நிதானங்களிலும், பூசையினும், யாகாதிகளினும் விளக்கிடுதல் மகா புண்ணியமாம். சோடச உபசாரங்களுள விளக்கிடுதலும் ஒன்றாம். விளக்கிடுதல் சரியைத் தொழில்களுள் விசேடித்ததாகச் சொல்லப்பட்டது. சிவபெருமானுக்கு முப்பத்திரண்டு உபசாரங்களோடு பூசை செய்க. அவை யியலாதாயிற் சோடசத்திற் பூசிக்க. அதுவுங் கூடாதவர் சந்தனம், புட்பம், தூபம், நைவேத்தியம் என்னும் பஞ்சோபசாரங்களோடு பணிதல் விதி. அதுவுஞ்செய்ய இயலாதார் முடிவிற் செய்யப்படும் தீபமாத்திரம் ஏற்றித் தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கராசயபோற்றி யென்னக் கடவர் என்று காமிக ஆகமம் இலளிதாகமம் முதலிய முதனூல்களுரைக்கின்றன. இதனாற் றீபத்தின் பெருமை யித்துணைத்து என்பது தெற்றெனப் புலப்படுகின்றது. புவனங்கள் யாவற்றையும் பொதுவறப்புரந்த மாவலிச் சக்கிரவர்த்தி யென்பான் யாவன? அவன் முற்பிறப்பிலெலியாகப் பிறந்துசிவாலயத்துள்ள விளக்கிலிடப்பட்ட நெய்யை யுண்ணுதற்குச் சென்றான். போயுண்ணுங் காலத்து மங்கியிருந்த தீபச்சுடர் தன்முகத்திற்சுட வுதறியதனால் அது ஓங்கியெரிந்தது.

(வளரும்)

### சிவஸ்ரீ: வைத்தீஸ்வரக் குருக்கள்

சிவஸ்ரீ: கு வைத்தீஸ்வரக் குருக்கள் 23-11-67 அன்று சிவபதம் அடைந்தனர். இவர் வேதாகம விற்பனர் சிவஸ்ரீ: ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களின் ஏகபுத்திரனாவார். தந்தையாரிடம் வேதசிவாகமங்களை நன்கு பயின்றவர். தந்தையார் வடமொழியிலும் தமிழிலும் பல சமய நூல்களை வெளியிட உறுதுணை புரிந்தவர். படாடோபமின்றி அடக்கமாகத்தமது வாழ்க்கையை நடத்தியவர். எவராலும் மதிக்கப்பட்டவர். அவருடைய பிரிவு யாவருக்கும் கவலையையளித்துள்ளது. அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக. அவருடைய தசாகம் 2-12-67 சனிக்கிழமை நடைபெறும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இலக்கம் 54 உம்மு பள்ளி வாசல் ஒழுங்கை யாழ்ப்பாணம், மல்சி ஆயுள் வீமா கொம்பனி மட்டப்படுத்தியது —வழக்காளிகள்
இல: M. B. 6358 எதிராக
நாகா ரோட்டு நல்லூர் யாழ்ப்பாணம் 1. ஞானப்பிரகாசம் தேவதாசன் 2. பெண் புஸ்பஜோதி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 6358-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1967-ம் ஆ மார்கழி மீ 29-ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 8096 இன்னும் ரூபாய் 7000-த்துக்கு 29-1-64 தொடக்கம் 26-11-64 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 206-30 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்கோயிற்பற்று நல்லூரிறை "செட்டிதோட்டம்" பர கில. இலா. 6-16-3 குளி உத்தரவு பெற்ற உலாந்தா ஜெ. டி. வீரசிங்கமவர்களால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 2225 திகதி 2 -11-45 ஐக் கொண்ட படத்தில் இரண்டாம் துண்டாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது, பதிவிலக்கம் D. 280/98 இதடங்கலிற் பிரிவிடப்பட்ட பர கில. இலா. 2-15-8 குளி தெற்கோரமாக விற்கப்பட்டதை நீக்கி வடக்குப் பக்கமாக இன்னும் விலைப்படாமலிருக்கும் ஆதனம் பர. கில இலா. 4-1 குளி மற்றுமதைச் சேர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு தம்பர் சபாபதி நகம் பெண் ஆச்சிப்பிள்ளைக்குரியவாதனம் வடக்கு தம்பர் முத்தையாவினுரிமையாளரின் ஆதனம் மேற்கு அன்தோனிப்பிள்ளை தம்பி முத்துவின் ஆதனம் தெற்கு மிகுதி ஆதனம்.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை ரோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
நல்லூர், யாழ்ப்பாணம், 30-11-67. M 322 1-21 )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

Dr. கனகசபை மகன் கந்தையா பத்மாவதி நாவலர் வீதி யாழ்ப்பாணம் —வழக்காளி.
இல M B 6473, எதிராக
முருகேசு சோமசுந்தரம் நல்லூர் யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 6473-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1967-ம் ஆ மார்கழி மீ 17-ம் திகதி (17-12-67) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 5500-ம் 6-3-64 தொடக்கம் 18-10-66 வரைக்கும் ரூபா 5000 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 321-07-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "கொல்லனவளவு" நில. பர.1 குளி 3½. இது உத்தரவு பெற்ற உலாந்தா எஸ். தம்புவால் 10-11-57-ல் தயாரிக்கப்பட்ட 584 ம் இலக்கப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. வீடும் கிணறும் பயிர்வகைகளும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கார்த்திகேசு தம்புவின் ஆதனம். மேற்கு கார்த்திகேசு தம்புவுக்கும் கார்த்திகேசு ஐயாதுரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு சண்முகம் செல்லப்பாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், பதிவு எண் D 283/191.

19, சுவாமியார் வீதி, சு. கந்தசாமி,
கொழும்புத்துறை, கொம்மிஷனர்&விலைமதிப்பாளர்.
யாழ்ப்பாணம், M 336 1-12-67.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வைரவன் கந்தன் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி —வழக்காளி
வழக்கு இல: M B 7602 எதிராக
1. சிற்றம்பலம் நடராசாவும் பெண்
2. சிவகாமி அம்பாள் புத்தூர் தெற்கு
3. ஆறுமுகம் கைலாயபிள்ளை — சிறுப்பிட்டி -எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 7602 -ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 4 துண்டுக் காணிகளை 1967 ம் ஆ மார்கழி மீ 27-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 16200-ம் 9-8-65 தொடக்கம் 22-3-66 வரைக்கும் ரூபா 10,000 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 530-20 சதம், (செலவில் கொடுக்கப்பட்ட ரூபா 200 குறைய)

ஆதன விபரம்:

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்கோவிற்பற்று புத்தூர்தெற்கிறை 'வீரியாண்டி வயல்' இதன் விஸ்தீரணம் நெற் பரப்பு 47½ எல்லை கிழக்கு கந்தையா மகள் நாகரத்தினம்மாவின் நிலம், வடக்கும் மேற்கும் ஒழுங்கை தெற்கு சிற்றம்பலம் நடராசாவின் நிலம். இது முழுவதும பதிவு இலக்கம K 208/210

(2) ஷெ புத்தூர் கோவிற்பற்று அச்செழு இறை 'ஆவரங்கலட்டி' இதன் விஸ்தீரணம் நிலப் பரப்பு 21½ எல்லை கிழக்கு மயில்வாகனத்தின் உரிமையாளர்களின் நிலம். வடக்கு பூதத்தம்பியின் உரிமையாளர்களின் நிலம். மேற்கு அச்செழு சிறுப்பிட்டி கிராம எல்லை. தெற்கு கந்தரின் உரிமையாளர்களின் நிலம். இது முழுவதும் பதிவு இலக்கம் K. 222/155.

(3) ஷெ புத்தூர் கோவில்பற்று அச்செழு இறை களிக்கும் பாறை இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு 20, எல்லை கிழக்கு வள்ளிப்பிள்ளையின் உரிமையாளர்களின் நிலம், வடக்கு சின்னப்பிள்ளையும் மறுபேரின் உரிமையாளர்களின் நிலம், மேற்கு சிற்றம்பலத்தின் உரிமையாளர்களின் நிலம், தெற்கு தார்மரின் உரிமையாளர்களின் நிலம், இது முழுவதும். பதிவு இலக்கம் K 222/156.

(4) ஷெ அச்சுவேலி கோவிற்பற்று அச்சுவேலி தெற்கிறை 'முதிரை காதையட்டி' இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு 10, எல்லை கிழக்கு சின்னையா பெண் வள்ளிப்பிள்ளைக்கும் பங்காளர்களுக்குமுரிய நிலம். வடக்கு கதிர்காமர் சின்னத்தம்பியின் நிலம், மேற்கு பண்படுத்த முடியாத நிலம். தெற்கு கந்தர் பெண் கதிராசிக்கும் பங்காளர்களுக்குமுரிய நிலம், இது முழுவதும் பதிவு இலக்கம் K 57/104

வே. கோபாலபிள்ளை,
22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 13-11-67 (எம் 334, 1-12-67 )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இளையதம்பி கந்தையா சுன்னாகம் — வழக்காளி
இல: 5158 / A எதிராக
1. சிதம்பரப்பிள்ளை வீரசிங்கம் சுன்னாகம்
(காலஞ்சென்ற மினுசித்தம்பி சிதம்பரப்பிள்ளையினதும் அவர் பெண் மீனாட்சியினதும் ஆதனங்களுக்கு சட்டபூர்வமான பிரதிநிதி) —எதிராளி

யாழ்ப்பாணம் றிக்குவெஷ்ற் கோட்டின் 5158 / A ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968-ம் ஆ ஜனவரி மீ 10-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபாய் 493-ம் 25-4-66 தொடக்கம் 22-9-66 வரைக்கும் ரூபாய் 250-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் இத் தொகையில் ரூபா 100-00 நீக்கி

ஆதன விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை 'பேயோட்டிச் சீமா'' வி. பர 2 ம் 15 குழியும் செய்பயிர் வான் பயிர்களும் வீடும். வட கிழக்குப் பக்கமாயுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை கிழக்கு சின்னையா கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு சிற்றம்பலம் பெண் மகேசுவுக்குரிய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு சபாரத்தினத்துக்குரிய ஆதனம். இவை யடங்கலும். பதிவு 312/19

நாரந்தனை தெற்கு, யு. அ. எட்வேட்,
ஊர்காவற்றுறை. கொமிஷனர் & விலைமதிப்பாளர்.
22-11-67. M 333 1-12-67.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிருப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

உரும்பிராய் அருணாசலம் சிவகுரு. —வழக்காளி

இல. M B 7570 எதிராக

1. இணுவில் சின்னையா குணநாயகமும் பெண்
2. புவனேஸ்வரியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 7570-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1967-ம் ஞு மார்கழி மீ 29 ந் உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா. 1179-72 சதம். இதில் ரூபா. 960/- க்கும் 21-7-65 தொடக்கம் 7-12-65 வரைக்கும் 100 க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 237-40 சதம்.

காணி விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி. உடுவில் கோயிற்பற்று இணுவில் இறை மூக்கறையன் பொல்லை "Mookariyanollai" பர. நில. 5. இதில் மேற்குப் பக்கமாக பர. நில. 3 (மூன்றும்) கல்வீடுகளும் செய்பயிர் வான் பயிர்களும், வடமேற்கு மூலையில் இருக்கும் கிணற்றில் பங்கும், சொல்லப்பட்ட மூன்று பரப்புக்கும் எல்லை கிழக்கு இரத்தின சபாபதி பெண் பரமேஸ்வரிக்குரிய இதன் மிகுதி ஆதனம், வடக்கு வயிரவநாதர் பொன்னம்பலத்துக்கும் பெண் சின்னம்மாவுக்கு குரிய ஆதனம், மேற்கு குமாரசாமி பெண் தையல்நாயகிக்குரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை. சொல்லப்பட்ட கிணற்றில், கிணற்றின் கிழக்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் பிறநீங்கல். இதன் மிகுதி ஆதனத்தில் சொரியலாய் 13/20 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், 25-10-67,

க. சுப்பிரமணியம், கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

எம். 331, 1-12—67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. உரும்பிராய் முத்துத்தம்பி செல்லரெத்தினம்
2. பெண் நாகரெத்தினம் —வழக்காளிகள்

இல. M B. 7680 எதிராக

1. உரும்பிராய் சின்னத்தம்பி பொன்னுத்துரை
2. பெண் அன்னலஷ்மி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B. 7680-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1967-ம் ஆ மார்கழி மீ 31-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (31-12-67) முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 6153-59 சதம், இன்னும் ரூபாய் 5500/- க்கு 17-9-65 தொடக்கம் 19-5-66 வரைக்கும் 8 வீத வட்டியும் அதன்மேல் முழுத தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 316-75 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய்க் கோயிற்பற்று உரும்பிராயிறை "கொல்கருவல சிமா" மற்றும் பிரிவுகளும் பர. நில. இள 3½-0 குளி ஆறுல் உலாந்த அளவின்படிக்கு பர. நில. இள 3-6 குளி வீடுகள் பயிர்களுடன். இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கையும் முருகவன்னைம் பெண் அன்னபூரணத்தி னுதனமும், வடக்கு ஐயாத்துரை பெண் தவமணியம்மாவி னுதனமும் ஒழுங்கையும் மேற்கு இளையவன் முருகனினுதனம், தெற்கு செல்லப்பா அரியதுரையினுதனம் இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

133 பருத்தித்துறை றோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம், 25-11-67.

செ. விசாகரெத்தினம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

M. 321. 1—12—67

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கிரிமலை தற்போது மலாயா

1. சுப்பிரமணியம் குமாரபதி
2. பெண் அம்பிகாதேவி (இவர்களின் அற்றோணி. கிரிமலை செல்லையா கைம்பெண் இராசேஸ்வரி அம்மாள்.

இல, M. B. 7916 எதிராக —வழக்காளிகள்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சென்மேரி தேவாலயம் ஒழுங்கை

1. நாகலிங்கம் சோமசுந்தரம்
2. பெண் புஸ்பராசமணி
3. செல்லப்பா கைம்பெண் அன்னபூரணம் (மரணம்)

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 7916-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1967-ம் ஆ டிசம்பர் (மார்கழி) மீ 22-ந் உ (22-12-67) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் முறையே அந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 20,240/- ம இதில் ரூபாய் 12,000/- க்கு 2-1-66 திகதி தொடக்கம் 6-12-66 திகதி வரைக்கும் 100 க்கு 11 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபாய் 475-84 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி கண்டிக்குளிக் கோயிற்பற்று சிவியாதெருவிறை "நறுவிலியடி வளவும், நறுவிலியடியும்" நிலப்பரப்பு பத்து (10-ம்) வீடும் மோட்டிக்கோவும் குசினியும் கிணறும், எல்லை கிழக்கு சிற்றம்பலம் இராசரத்தினத்தின் ஆதனம், வடக்கு தண்டாயுதபாணி கோவில் ஆதனமும் றோட்டும், மேற்கு செல்லப்பா அருளம்பலத்தின் ஆதனம், தெற்கு செல்லப்பா கனகரத்தினத்தின் ஆதனம் இதடங்கலும். முற்பதிவு D 257/268.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

தெல்லிப்பழை. 6-10-67. Commissioner & Valuer,

எம். 324 1-12—67

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம் கட்டைப்பிராய் வீரவாகு ஐயாத்துரை — வழக்காளி

இல. P. 1032

எதிராக

யாழ்ப்பாணம். கல்வியங்காடு

1. கனகர் ஆறுமுகம்
2. பெண் நாகம்மா
3. நமசிவாயம் குணநாயகம்
4. பெண் இராசமணி

—எதிரி

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று கோப்பாய் தெற்குஇறையில உள்ள அரசொல்லை என்னும் காணிக்கு 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1966-ம் ஞு புரட்டாதி மீ 15 உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

மறுதவணை: 7-12-67

கோட்டாரின் கட்டளைப்படி

Sgd, N. Subramaniam

சக்கிடுத்தார்

1966-ஆம் ஞு ஆடி மீ 6உ

எம். 332 1-12-67

---

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திரிக் கோட்டில்

1. கரவெட்டி வடக்கு சபாபதிப்பிள்ளை சபாரத்தினம், 2. பெண் பத்தினிப்பிள்ளை.

—வழக்காளிகள்

இல. 9702.

எதிராக

1. கரவெட்டிவடக்கு இராமநாதன் கைம்பெண் நாச்சிப்பிள்ளை. 2. இராமநாதன் பஞ்சாட்சரம், 3. பெண் தெய்வானைப்பிள்ளை. 4. குமாரசூரியர் நடேசு 5. கரவெட்டி மேற்கு கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 6. கரவெட்டி வடக்கு சின்னையா மயில்வாகனம், 7. பெண் பத்தினிப்பிள்ளை, 8. வல்லிபுரம் செல்லத்துரை, 9, முருகேசு கந்தவனம், 10. வேலாயுதம் கந்தசாமி, 11. பெண்தேவசஞு. 12- வெற்றிவேலு முருகேசு, 13. நாகநாதர் சதாசிவம் 14, பொன்னம்பலம் கனகசபாபதி, 15. பொன்னையா பாலசுப்பிரமணியம், 16. பெண்பத்மவேணி, 17. வயித்திலிங்கம் சிவயோகநாதன், 18 பெண் பாக்கியலட்சுமி, 19. வேலுப்பிள்ளை நடேசு, 20. பெண் பத்தினிப்பிள்ளை, 21. சின்னையா நடராசா, 22. பெண்வள்ளிப்பிள்ளை, 23 பொன்னம்பலம் கனகசபாபதி பெண் செல்லம்மா மறுநாமம் செல்லக்கண்டு, 24. ஆறுமுகம் தங்கவடிவேலு, 25. வல்லிபுரம் கைம்பெண் தங்கமுத்து,

— எதிரிகட்கு

கரவெட்டி வதிரி குறிச்சியிறை பர. நில. 8¼, ஷெ நில பர 4, ஷெ நில, பர. 7½ ஷெ வீடு 1 என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1967-ம் ஞு மார்கழி மீ 20 உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

செ. யோ. நவரட்டினம்

சக்கிடுத்தார்

1967-ம் ஞு ஐப்பசி மீ 10 உ

(எம் 229 1-12-67)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. T. ஞானசுந்தரமும் 2. பெண் கனகசுந்தரி

வழ. இலக்கம். M B. 6209 எதிராக —வழக்காளிகள்

திருநெல்வேலி கந்தையா கைம்பெண் பூரணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B. 6209-ம் ஆம் இலக்க வழக்கில் எனக்குககிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒரு துண்டு பிரிக்கப்படாத காணியை 1968-ஆம் ஞு தை மாதம் 20-ம் திகதி (20-1-68) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 6050/— இதில் ரூபா 4000/— ததுக்கு 22-11-63 தொடக்கம் 4-8-64 வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100 கது 5 வீத வட்டியும் கோட்டால் ஸ்தாபித்த செலவு ரூபா 125/—

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் கரச்சிப்பகுதி கரச்சி கோயிற்பற்று முரசுமோட்டை இறை 'முரசுமோட்டைக் கமம்' 27 ஏக்கர் 2 றூட்ஸ், 32 பேட்சேஸ் சொல்லப்பட்ட ஆதனத்தில் பிரிக்கப்படாத 4/10 பங்கு. இந்த 27 ஏக்கர் 2 றூட்ஸ் 32 பேட்சேஸ்க்கு எல்லை கிழக்கு பன்னைக்கண்டி ஆறு வடக்கு றோட்டுக்காக கிரகித்து வைத்த நிலம். மேற்கு 79-ம் இலககப் பாகம். தெற்கு றோட்டுக்காக கிரகித்து வைத்த நிலம். முற்பதிவு B 38/18.

தா. செல்லையா

37, கொழும்புத்துறைவீதி, சுண்டிக்குளி. யாழ்ப்பாணம். 9-10-67

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

M 327 1-12-67.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கொழும்பு புளோமென்டால் றோட்டு இல 681 எம். அருளானந்தம் — வழக்காளி.

இல. M B. 8913 எதிராக

கொழும்பு போட் கொம்மிஷன் பொது உலாவும் காவல் உத்தியோகஸ்தர் மேல்பார்த்து 1. ரீ. எஸ். யோசெவ் காங்கேசன்துறை ஊறுவில் 2. அன்னம்மா (ரீ. எல். யோசெவ் பெண்)

—எதிராளிகள்.

கொழும்பு டிஸ்திறிக் கோட்டில் M B 8913-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிககப்படும் ஒரு துண்டுக காணியை 1967-ம் ஆ டிசம்பர் (மார்கழி) மாதம் 27-ம் திகதி (27-12-67) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 3034-ம் இதில் ரூபா 2000 கது 5-9-63 திகதி தொடக்கம் 14-5-64 திகதி வரைககும் 100 க்கு 7 வீத வட்டியும் பின் திகதி தொடககம் முழுததொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 401-10 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைககோவிற்பற்று பலாயிறை வாரி ஊறுவிலும் கலுத்துவான் 'கலட்டியும்' நிலப்பரப்பு ஆறு (6-ம்) எல்லை கிழககு ஒழுங்கை வடக்கும் மேற்கும் சவரிமுத்து மரியாம்பிள்ளைககும் பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனம். தெற்கு சவரிமுத்து பெண் எலிசபெத்துக்கும்பங்காளருக்குமுரியஆதனம் இதடங்கலும்.

தெல்லிப்பழை 17—11—1967,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை, கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

எம், 325, 1—12—

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு

வழக்கு, இலக்கம்: M. B. 7640

குப்பிளான் சங்கரப்பிள்ளை துரையப்பா — வழக்காளி

எதிராக

ஏழாலை 1, செல்லத்துரை சபாபதிப்பிள்ளையும் (இறந்துவிட்டார்)
2. மனைவி சின்னத்தங்கச்சியும் —எதிராளிகள்

M B. 7640-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்க்காணும் ஆதனம் 1967-ம் ஞு டிசம்பர் மீ 26 ந் திகதி (26-12-67) செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக காணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 3855/- மேலும் 2500/- ரூபாவிற்கு 30-8-65 தொடககம் 2-3-66 வரைக்கும் வருடமொன்றிற்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைககும் இறுக்குமவரைக்கும் வருடமொன்றிற்கு 5 வீத வட்டியும் இதில் 14-5-66 ல் ரூபா 650 கட்டப்பட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாககாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோயிற்பற்று ஏழாலை இறை "புளியின் றபுலம்" நிலப்பரப்பு 4, குளிகள் 2 2/5 வீடும் செய் பயிர்வான் பயிர்களும் வடமேற்கு மூலையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்ககாலுரித்தும். இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு கைஒழுங்கையும். தார்வை நிலமும் மேற்கு பொன்னம்பலம் மகள் பதமாவதிககும் பங்காளர்களுககுமுரிய ஆதனம், இவ்வெல்லைகளுக்குட்பட்ட முழுவதும். பதிவு H 210/146.

"இராசகிரி" 643, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், 28-10-67.

வி. செ, குட்டிப்பிள்ளை, ஏல விற்பனவாளர், கொமிஷனரும். விலைமதிப்பாளரும்.

M, 302, 1-12-67.

---

குழவி வெண் பிறை மிலைச்சி யோற் குணித்த மாதவத்தின்
இழை தடம்புன லருவி தாழிமைய மீன்றளித்த
மழை மதர்த்த கண்மரகதப் பசும்பிடி பயந்த
தழை மடற் செவித் தந்தி போற் சரணமே சரணம்.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 1—12—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.